**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 21** **நாள்:26.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய குடியரசு தினவிழாவில் மூவர்ண தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செய்து, 2 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.3,57,000 மதிப்பிலான காசோலையினையும், 8 மருத்துவ அலுவலர்கள், 94 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் சிறப்பு அதிகாரி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய குடியரசு தினவிழா இன்று (26.01.2019) சிறப்பாக நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், தேசிய மாணவர் படை, கலர் பார்ட்டி, சாரண, சாரணியர் மற்றும் வாத்தியக்குழுக்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, 4 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளின் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மகளிர் சுயதொழில் தொடங்கிட சுயஉதவிக் குழுவினருக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், பெருநகர சென்னை மாவட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தனலட்சுமி மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.2,04,000/–க்கான காசோலை, புன்னகை மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.1,53,000/– இலட்சத்திற்கான காசோலை என மொத்தம் ரூ.3,57,000/–க்கான வட்டி மானியத்துடன் கூடிய நேரடி வங்கிக்கடன் இணைப்பிற்கான காசோலைகளை பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, சென்னை ஒருங்கிணைந்த கல்வித்திட்டத்தின் கீழ் பள்ளிக்கல்வித்துறை சார்பில் பள்ளி வளாகத்தில் தண்ணீர், சுத்தம் மற்றும் சுகாதாரம் சார்ந்தவற்றை சிறப்பாக செயல்படுத்தியுள்ளதை பாராட்டி 12 பள்ளிகளைச் சார்ந்த தலைமையாசிரியர்களுக்கு தமிழக அரசின் மாவட்ட அளவிலான தூய்மைப் பள்ளி விருதுகளும் (Swachh Vidyalaya Puraskar Award), தூய்மை நிகழ்வுகள் (Swachhta Pakhwada) சார்பாக பள்ளிகளில் நடைபெற்ற ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும், மருத்துவத்துறையில் சிறப்பாக பணியாற்றிய 8 மருத்துவ அலுவலர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய 94 அலுவலர்கள், பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ/மணவியர்களுக்கும், அணிவகுப்பில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர், கலர் பார்ட்டி மற்றும் வாத்தியக்குழுக்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**